[11th February 1955

" (c) Yes.

" (d) The petitions were disposed of in August 1952, in cousultation with the Collector of Tiruchirappalli. It was proposed to protect the village of Nagaratnampallam and the ayacut lands under the Odaikulam from submersion by the formation of a flood bank on the left side of the Vellar and by keeping the top of the sand bank at such a height as not to cause any submersion of ayacut respectively.

" (e) A portion of the new supply channel has been excavated and silt clearance to the existing supply channel to the Nor-Pavalakudi tank below its head sluice has been done. The sand bank and the flood bank are yet to be formed."

11-10 a.m. Sri V. BALAKRISHNAN :—" May I know how many acres will be irrigated by the construction of this anicut? "

The Hon. Raja Sri SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" It is not an anicut, Sir. I said it is only a sand-bank to prevent submersion."

Opening of Harijan welfare schools in the South Arcot district.

* 616 Q.—Sri M. KATTIMUTHU : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(a) whether there is any proposal with the Government for opening new Harijan welfare schools in South Arcot district in 1954–55; and

(b) if so, the places where these schools will be opened?

The Hon. Sri B. PARAMESWARAN :—" (a) No.

" (b) Does not arise."

Neyveli Lignite Project.

* 617 Q.—Sri A. RATNAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the total cost of the machinery installed at Neyveli Lignite Project in the South Arcot district;

(b) the cost of machinery yet to be installed; and

(c) the reasons for not allowing man-power for excavating lignite ores?

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" (a) The total cost of machinery at the project is about Rs. 61·39 lakhs.

" (b) This will depend on the shape of final project decided upon.

" (c) Manual labour is employed consistent with safety and economy. The machines are used to expedite excavation only to the extent it is beyond the capacity of manual labour. Actually over 400 men are employed on this work."

11th February 1955]

SRI A. RATNAM :—" சாதாரணமாக தரைமட்டத்திற்குமேல் மண்ணை போடுவதற்கு கூட இயந்திரங்களை உபயோகப்படுத்துவது கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ? இதன் விளைவாக கண்டிராக்டர்கள் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். ஆனால் வேலை செய்யும் பாட்டாளி மக்கள் மிகவும் பரிதாபகரமான நிலையில் இருக்கிறார்கள். ஆதலால் இவ்விஷயத்தை கனம் அமைச்சர் அவர்கள் தீரயோசனை செய்து ஆவன செய்வாரா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" முன்பே சொன்னேன் எவ்வளவு அவசியம் எப்போது ஏற்படுகிறதோ அப்போழுது செலவு குறைவாகவும் ஆபத்தில்லாத நிலைமையை மனதில் வைத்துக்கொண்டும் அவ்வளவுதூரம் இயந்திரத்தை உபயோகப்படுத்துகிறார்கள். இந்த விஷயத்தில் கனம் அங்கத்தினருக்கு பாட்டாளி மக்களிடத்தில் எவ்வளவு அக்கறை இருக்கிறதோ அதற்குக் குறைவாக இல்லை அரசாங்கதின் அக்கறை. மற்றபடி கண்டிராக்டர்கள் கொள்ளை அடிப்பதாகச் சொன்னது, கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லும் வழக்கமான வார்த்தைகள்."

SRI K. R. SAMBANDAM :—" இயந்திரங்கள் மத்தியசர்க்கார் உதவியைக்கொண்டு வாங்கப்பட்டதா அல்லது சென்னை சர்க்காரின் நிதியிலிருந்து வாங்கப்பட்டதா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" மத்திய சர்க்கார் உதவியைக்கொண்டும், டி.வி.எம். உதவியைக்கொண்டும், அயல்நாட்டிலிருந்து இயந்திரங்கள் வாங்கப்பட்டன."

SRI C. KANDASAMY :—" இப்போழுது கனம் மந்திரி அவர்கள் கொடுத்த புள்ளிவிவரத்திலிருந்து 61 லட்சம் ரூபாய் இயந்திரங்களுக்கு செலவழிக்கப்பட்டதாகவும், திட்டத்திற்கு 80 லட்சம் ரூபாய் செலவழித்ததாகவும் தெரிகிறது. சாதாரணமாக ஏழை தொழிலாளிகளுக்குக் கிடைத்த சம்பாத்தியம் எவ்வளவோ குறைவாக இருக்கிறது. அதோடு நாட்டிலே பெரும்பாலோர் வேலையில்லாது கஷ்டப்படும்போது இந்த இயந்திரங்களை உபயோகிக்காமல் அதற்குப்பதிலாக மனித சக்தியை உபயோகப்படுத்த சர்க்கார் முன்வருவார்களா ? இந்த வேலைகளில் அமர்த்தப்பட்டிருப்பவர்கள் தொகையைவிட 10 மடங்கு தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" இந்த வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களின் தொகைக்கு பன்மடங்கு அதிகமாயுள்ள வேலையில்லாதவர்களுக்கு வேலைகொடுப்பதற்கான ஒரு மகத்தான திட்டத்தை சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தத்திட்டத்தை முடிவுக்குக்கொண்டுவர சர்க்கார் என்னென்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமோ அந்தந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்கள்."

SRI M. KALYANASUNDARAM :—" ஆலோசனைக்காக சர்க்காரால் அமர்த்தப்பட்ட என்ஜினியர்கள் 4 அல்லது 5 திட்டங்களை ஆலோசனை செய்து சர்க்காருக்கு ரிபோர்ட் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதைப்பற்றி சர்க்கார் ஒரு முடிவுக்கு வந்தார்களா ? அப்படி இருந்தால் எந்தத் திட்டத்தை அமுலாக்க சர்க்கார் நிச்சயித்திருக்கிறார்கள் ? "

The Hon. SRI M. BHAKTAVATSALAM :—" இப்பொழுது நடத்தப்பட்டுவரும் பைலட் ஸ்கீம் பிரகாரம் இப்பொழுது வேலை நடந்துகொண்டு வருகிறது. அந்த பைலட் ஸ்கீம் முடிவான பிறகு அந்த ஆலோசகர்கள் தெரிவித்த யோசனைகளின்பேரில சர்க்கார் ஒரு முடிவிற்கு வருவார்கள்."

SRI K. V. RAMASAMI :—" இந்த இயந்திரங்கள் எந்த நாட்டிலிருந்து வாங்கப்பட்டன ? அப்படி வாங்கியிருந்தால் எத்தனை இயந்திரங்கள் வாங்கப்பட்டன ? "

[11th February 1955

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" சில இயந்திரங்கள் 'டிஸ்போசல்ஸ்' இடமிருந்து வாங்கப்பட்டன. இன்னும் சில இயந்திரங்கள் அயல் நாட்டிலிருந்து வாங்கப்பட்டன. எந்தெந்த நாட்டிலிருந்து எவ்வாறு வாங்கப்பட்டன என்பதை தெரிந்துகொள்வதற்கு கனம் அங்கத்தினர் நோட்டிஸ் கொடுத்தால் விவரம் தரலாம்."

SRI A. RATNAM :—" மேனாடுகளிலிருந்து வாங்கப்பட்ட பம்பு செட்டுகள் வராததினால் வேலை நிறுத்திவைக்கப்பட்டது. ஆதலால் நம் நாட்டிலே உற்பத்தியாகும் பம்பு செட்டுகளை வைத்துக்கொண்டு உடனடியாக வேலையை ஆரம்பிக்க கனம் அமைச்சர் அவர்கள் யோசிப்பார்களா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" 25 அடி வரை தோண்டப்பட்டிருக்கிறது. பூமியில் வேலை செய்வதற்குத் தகுந்த பம்பு செட்டுகள் நம் நாட்டில் இல்லை. அயல்நாடுகளிலிருந்து வாங்குவதற்கு அவைகளுக்கு டெண்டர் நோடீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. டெண்டர்கள் வந்தபிறகு அதைப்பற்றி சர்க்கார் ஒரு முடிவுக்கு வரக்கூடும்."

SRI S. RAMALINGAM:—" இப்பொழுது சுரங்கத்தில் எத்தனை அடி ஆழம் வரையிலும் தோண்டப்பட்டது.? இன்னும் நிலக்கரி எடுப்பதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" இன்று 25 அடி ஆழத்தில் இருக்கும் தண்ணீரை எடுத்த பிறகுதான் நிலக்கரியை எடுக்க முடியும். ஆனால் இதை எடுப்பதற்கு எவ்வளவு நாள் பிடிக்கும் என்பது தெரியாது."

SRI P. VENKATESHA SHOLAGAR :—" இயந்திரங்கள் மூலம் குறைந்த செலவாகிறது என்ற கருத்துடன் சர்க்கார் அதிக இயந்திரங்களை வாங்குகிறார்கள். ஆனால் அதேசமயத்தில் கைகுத்தல் அரிசியை உபயோகிக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு அதற்கு சப்ஸிடி கொடுத்து வரக்கூடிய நிலையில் சர்க்கார் என் இப்பொழுது இயந்திரங்களை உபயோகப்படுத்துவதுதான் மேலெனக் கருதுகிறார்கள் ? இயந்திரங்களை வெளிநாடுகளிலிருந்து வரவழைத்து உபயோகப்படுத்துவது இங்கு இருக்கும் தொழிலாளர்களை வேலையில்லாமல் செய்து விடுவதாகாதா என்று அறியவிரும்புகிறேன்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்று எனக்குப் புரியவில்லை. பெரிய பெரிய அணைக்கட்டு திட்டத்திற்கெல்லாம் பெரிய இயந்திரம் தேவை. உதாரணமாக கீழ் பவானி அணைக்கட்டுத் திட்டத்திற்கு எவ்வளவோ இயந்திரங்கள் வாங்கப்படுகின்றன. எந்த அளவுக்குத்தேவையோ அந்த அளவுக்குத் தான் அவைகள் வாங்கப்படுகின்றன. இதுதான் இன்று வரையிலும் எல்லா இலாக்காக்களினாலும் அனுஷ்டிக்கப்பட்டுவந்த கொள்கை."

Supply of medicines to the Local Fund Dispensary at Turaiyur.

* 618 *Q.*—SRI P. RANGASWAMI REDDIAR : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the annual amount of subsidy or cost of medicines, granted or supplied to the Local Fund Dispensary, Turaiyur, during the years 1951 to 1954;

(*b*) the approximate amount deducted from the grant towards charges for the transit of medicines;

(*c*) in what month the grant or supply of medicines is usually made in a year;

(*d*) whether it is a fact that no grant or supply of medicine has been made since February 1954 and the hospital is working without any medicines; and